# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை - 2023


| தரம் : 06 | பாடம் : கணிதம் | நேரம்: 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

**பெயர் / சுட்டெண் :** ........................................................................................

### பகுதி I

❖ **எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.**

01) உருவிலுள்ள தரவுகளைக் கொண்டு,





i. வட்டத்தின் மீது உள்ள புள்ளி எது?

ii. வட்டத்திற்கு வெளியிலுள்ள புள்ளியைத் தருக.

02) கடிகாரத்தில் 9 மணியாகும் போது மணித்தியால முள்ளுக்கும், நிமிட முள்ளுக்கும் இடைப்பட்ட சிறிய கோண வகை யாது?

03) 1000 x 8 + 100 x 0 + 10 x 9 + 1 x 3 எனத் தரப்பட்ட எண் யாது?

04) உருவில் எத்தனை கூர்ங்கோணங்கள் உள்ளன?




05) 999995 என்னும் எண்ணை கிட்டிய 10 இன் மடங்கிற்கு மட்டந்தட்டி அதனை நியம வடிவில் தருக.

06) அக்சயன் நாள் ஒன்றில் காலை எழும்பும் நேரம் மற்றும் இரவு நித்திரை செய்யும் நேரம் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது. அவ் அட்டவணையில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.

| நிகழ்வு | சாதாரண நேரம் | நியமநேரம் |
|---|---|---|
| இரவு நித்திரை செய்யும் நேரம் | 10.30 pm | |
| காலை எழும்பும் நேரம் | | 04 : 45 |

07) 3 072 என்னும் எண்ணை 9 ஆல் வகுக்க கிடைக்கும் ஈவு மீதி என்பவற்றை தருக?

08) கீழே தரப்பட்ட எண்கோட்டில் -2 இற்கும் / இற்கும் இடைப்பட்ட நிறை எண்களை வகைக்குறிக்க.




09) தென்மேற்கு திசையிற்கு செங்குத்தாகவுள்ள இரண்டு திசைகளைத் தருக?




kalvi.lk


10) 46 075 என்னும் எண்ணில் இலக்கம் 6 வகைகுறிக்கும் பெறுமானத்தைக் காண்க.

11) சுவர் ஒன்றை நிலைக்குத்தாக கட்டுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம் ஒன்றைத் தருக?

12) சுருக்குக. $203 \times 1000$

13) 9 புத்தகங்களின் விலை ரூ. 1 809 எனின், அத்தகைய 3 புத்தகங்களின் விலையைக் காண்க.

14) உருவில் குறிக்கப்பட்ட கோணத்தின் வகை யாது?



15) பி.ப 1.30 மணியை நியம வடிவில் தருக?

Education கல்வி අධ්‍යාපන

16) சுருக்குக. 37 + 101 − 95

17) ஒரு பில்லியனில் எத்தனை பூச்சியங்கள் உண்டு.

18) கீழே தரப்பட்ட கூற்றுக்கள் சரியாயின் "√" எனவும் பிழையாயின் " × " எனவும் இடுக.

i. பெரிய 25 தேங்காய்களை உமது புத்தகப் பையினுள் வைக்கலாம். (…….)

ii. சாதாரண ஒரு மனிதன் 1 km தூரத்தை தடையின்றி நடக்க 10 நிமிடங்கள் எடுக்கலாம். (…….)

19) சுருக்குக.

$37 \times 25$

20) ஒரு மாணவன் 03 நிறங்களை உடைய சில பந்துகளை வைத்திருந்தான். ஆவற்றுள் 7 பந்துகள் நீல நிறமற்றவை. 06 பந்துகள் பச்சை நிறமறறவை. 05 பந்துகள் மஞ்சள் நிறமற்றவை ஆகுமெனின், அவர் வைத்திருந்த மொத்த பந்துகளின் எண்ணிக்கை யாது?

($2 \times 20 = 40$ புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

❖ **எவையேனும் 05 வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**

*(01)*

a. 207 என்னும் எண்ணை எண் சட்டம் ஒன்றில் தருக.

b. 34202 என்னும் எண்ணை சொற்களில் எழுதுக.

c. சுருக்குக.

i. $97 \times 109$

ii. $14424 \div 24$

iii. $\frac{30 \times 700}{10}$


iv. $19000 \times 0$

Education கல்வி அதியாபன

(3 + 2 + 2 + 2 + 2 + 1 = 12 புள்ளிகள்)

*(02)*

a. மூன்று மாணவர்களின் வயது பின்வரும் எண்கோட்டில் தரப்பட்டுள்ளது.




i. இவர்களில் வயது குறைந்தவர் யார்?

ii. மதனின் வயது 13 வருடங்கள் என்பதை மேலுள்ள எண்கோட்டில் குறித்துக்காட்டுக.

iii. இவர்களில் வயது கூடியவருக்கும் வயது குறைந்தவருக்கும் இடையிலான வித்தியாசத்தைக் காண்க.

iv. சுதனின் வயது 14 வருடமாகும் போது விமலின் வயதைக் காண்க.



kalvi.lk

b. “>” or “<” என்னும் குறியீட்டைப் பயன்படுத்தி இடைவெளி நிரப்புக.

i. *3* _ _ _ (*-3*)

ii. (*-6* )_ _ _ (*-2*)


iii. ½ _ _ _ *0*

iv. *0* _ _ (*-1*)

*(2 + 2 + 2 + 2 + 1 + 1 + 1 + 1 = 12 புள்ளிகள்)*

*(03)*

a. ஒரு நிலைக்குத்தாக கட்டப்பட்ட புறாக்கள் வாழும் சட்டம் ஒன்றில் A, B, C, D, E என்னும் புறாக்கள் நிற்பதை கீழே உள்ள உரு காட்டுகின்றது.




கீறிட்ட இடங்களை நிரப்புக.

i. புறா E இற்கு கிடையாக …………………….. புறா உள்ளது.

ii. புறா A இற்கு …………………… ஆக புறா C உள்ளது.

iii. புறாக்கள் C, D என்பன ………………………….. தளத்தில் உள்ளன.

b. 0, -3, 8, -2 என்னும் எண்களை ஏறுவரிசையில் தருக.


c. வட்டக்கோலம் ஒன்று வரைக.

d. 196 ஐ கிட்டிய பத்தின் மடங்கிற்கு மட்டந்தட்டுக.

*(2 + 2 + 2 + 2 + 2 + 2 = 12 புள்ளிகள்)*

*(04)*

a. கீழே தரப்பட்ட உருவிலுள்ள தரவுகளைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.



i. பாடசாலைக்கு எத் திசையில் வீடு உள்ளது?

ii. நூலகம் சந்தைக்கு எத்திசையில் உள்ளது?

iii. இடைவெளி நிரப்புக.
பாடசாலைக்கு வட கிழக்குத் திசையில் …………………………………………….. உள்ளது.

iv. நூலகத்திற்கு கிழக்காக உள்ளவை எவை?


b. கீழே தரப்பட்ட உருவில் கிடையாகவும், நிலைக்குத்தாகவும், மூலைவிட்டம் வழியேயும் உள்ள மூன்று எண்களைக் கூட்டும் போது 15 கிடைக்கப்பெறும் எனின், அதிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக.

| | | |
|---|---|---|
| | | 4 |
| 7 | | 3 |
| | 1 | |

(2 + 2 + 2 + 2 + 4 = 12 புள்ளிகள்)

(05)

a. ஒரு கிராமமொன்றிலுள்ள வீதியின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது. இங்கு ஆங்கில சிறிய எழுத்துக்களால் சில கோணங்கள் குறித்துக்காட்டப்பட்டுள்ளது.




அட்டவணையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக.

| | |
|---|---|
| a | |
| | நேர்கோணம் |
| e | |
| d | |
| | கூர்ங்கோணம் |



kalvi.lk

b. *8134579089* என்னும் எண்ணை

i. நியம வடிவில் தருக.

ii. சொற்களில் எழுதுக.

iii. *5* இன் இடப்பெறுமானம் யாது?

iv. *4* ஆல் வகைகுறிக்கப்படும் பெறுமானம் யாது?

*(5 + 1 + 2 + 2 + 2 = 12 புள்ளிகள்)*

*(06)*

a. சமமான நேரங்களை தொடர்புபடுத்துக.

| | |
|---|---|
| *120* செக்கன்கள் | *3* நாட்கள் *18* மணித்தியாலங்கள் |
| *250* நிமிடங்கள் | *96* மணித்தியாலங்கள் |
| *4* நாட்கள் | *2* நிமிடங்கள் |
| *90* மணித்தியாலங்கள் | *4* மணித்தியாலங்கள் *10* நிமிடங்கள் |

b. கூட்டுக.

| மணித்தியாலம் | நிமிடங்கள் | செக்கன்கள் |
|---|---|---|
| 2 | 27 | 42 |
| 3 | 41 | 30 |

c.



Rs. 42      Rs. 67

உருவிலுள்ள தகவலைக்கொண்டு ◯ இன் பெறுமதியைக் காண்க?

*(8 + 2 + 2 = 12 புள்ளிகள்)*



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.*

*அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...*

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457